200304

**AECCO7.1**

Reg. No.

**I Semester B.Com./B.Com. (Industry Integrated) Degree Examination, February/March - 2024**

**TAMIL LANGUAGE**

**(NEP Scheme 2021-22 and Onwards Freshers and Repeaters)**

**Paper : I (Part-1)**

**Time : 2½ Hours** **Maximum Marks : 60**

## SECTION - A

**I.** அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந் தெடுத்து எழுதுக. **(5×1=5)**

1. குறுந்தொகை நூல் ------------ பொருள் பற்றியதாக அமைந்துள்ளது.
   அ) அகப்பொருள் ஆ) புறப்பொருள்
   இ) முதற்பொருள் ஈ) கருப்பொருள்

2. தமிழின் உயிர்மெய் எழுத்துக்கள் எவ்வளவு?
   அ) 12 ஆ) 30
   இ) 216 ஈ) 247

3. தமிழில் உள்ள நூல்களிலேயே மிகவும் சிறப்பு பெற்ற நூல்
   அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம்
   இ) மணிமேகலை ஈ) சீவக சிந்தாமணி

4. சிவகங்கை மன்னன்
   அ) முத்துவடுகநாதர் ஆ) மருதுபாண்டியன்
   இ) கட்டபொம்மன் ஈ) சின்ன மருது

5. பாணர்களில் சிறிய யாழை வைத்திருந்தவர்கள் ------- எனவும் அழைக்கப்பட்டனர்
   அ) பெரும்பாணர் ஆ) பாடினியர்
   இ) சிறுபாணர் ஈ) பாணர்

Sophia Evening College
# 70, Palace Road,
Bengaluru-01

**II.** எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(5×3=15)**

1. "கருங்கால் வேம்பின், ஒண் பூ யாணர் என்னை இன்றியும் கழிவது கொல்லோ?"
2. நறு நீர்ப் பொய்கை அடைகரை நிவந்த தூறு நீர்க் கடம்பின் கணை ஆர்கோதை"
3. "உம்மிடம் சேர்வதால் இந்த வாளின் மதிப்பே உயர்ந்து விடுகிறது"
4. "வான்நின்று உலகம் வழங்கி வருதலான் தான்அமிழ்தம் என்று உணரல் பாற்று"

[P.T.O

5. “பெரியவரே, நான் கடவுள் அல்ல உங்களில் ஒருவன்தான். இதோ பாருங்கள் என்னைத் தெரிகிறதா?”

6. “தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கும் கற்றனைத்து ஊறும் அறிவு”

7. “மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள், வாள் முகப் பாண்டில் வலவனொடு”

8. “சரி சரி பேச்சை விடுங்க என்னமோ நம்ம தலைவிதி இங்கே வந்து இப்படிச் செத்துப் புழைக்கணும்னு எழுதியிருக்கு”

## SECTION - B

**III.** எவையேனும் ஐந்திற்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1. சார்பெழுத்துகளின் வகைகளைக் குறிப்பிடுக.
2. சொல்லிசை அளபெடையினைச் சான்றுடன் கூறுக.
3. வினா எழுத்துகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. மொழி இறுதி எழுத்துகளைச் சான்றுடன் விளக்குக.
5. சின்ன மருது பாத்திரப் படைப்பை விளக்கி வரைக.
6. நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பை பற்றி எழுதுக.
7. சிறைக்குடி ஆந்தையார் பாடியுள்ள குறுந்தொகைப் பாடலின் பொருளை விளக்குக.
8. கர்னல் ஸ்மித்தின் பாத்திரப் படைப்பு குறித்து எழுதுக.

## SECTION - C

**IV.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×5=20)**

1. சிவகங்கை மக்களின் நாட்டுப் பற்றை புலப்படுத்துக.
2. கல்வியின் இன்றியமையாமையை திருக்குறள் வழிநின்று புலப்படுத்துக.
3. சின்ன மருதுவின் போர்த் உத்திகள் குறித்து எழுதுக.
4. தலைவனுக்குத் தோழி வாயில் நேர்ந்தமை குறித்து குறுந்தொகை கூறுவனவற்றை விளக்குக.
5. கலெக்டர் லூஷங்டனின் பாத்திரப் படைப்பை ஆராய்க.
6. கடையேழு வள்ளில்களின் கொடைச் சிறப்பினைக் காட்சிப்படுத்துக.

Sophia Evening College #70, Palace Road, Bengaluru-01